**<u>வட மத்திய மாகாண பாடசாலைகளில் நிலவும் வெற்றிடங்களுக்காக இலங்கை ஆசிரியர் சேவையின் 3 ம் வகுப்பின் 1 (அ) தரத்திற்கு பாடசாலை மட்டத்தில் அபிவிருத்தி உத்தியோகத்தர்களாக நியமனம் பெற்ற பட்டதாரிகளையும் டிப்ளோமாதாரிகளையும் ஆட்சேர்ப்புச் செய்தல்; - 2022;</u>**

கல்வி அமைச்சின் செயலாளரின் இல ED/02/29/21/AI/01/2020 மற்றும் 2021.12.31 திகதியுடைய கடிதம் மற்றும் 2021.04.19 திகதியுடைய இல wum/21/0658/340/013 இலக்கமுடைய அமைச்சரவைத் தீர்மானம் , 2021.12.21 திகதியுடைய இல wum/21/3076/315/003-1 இலக்கமுடைய அமைச்சரவைத் தீர்மானம் , அதி விசேட வர்த்தமாணி இலக்கம் 1885/38 மற்றும் 2014.10.23 திகதியுடைய இலங்கை ஆசிரியர் பிரமானத்தின் நடைமுறைகளுக்கேற்ப வட மத்திய மாகாணப் பாடசாலைகளில் நிலவுகின்ற ஆசிரியர் வெற்றிடங்களுக்காக 1/2016 சுற்று நிருபத்தில் அனுமதிக்கப்பட்ட ஆசிரியர்கள் தொகையின் அடிப்படையில் 2022.06.30 ஆம் திகதி அன்று நிலவுகின்ற ஆசிரியர் வெற்றிடங்கள் 1993 க்காக பாடசாலை மட்டத்தில் ஆட்சேர்ப்புச் செய்வதற்காக விண்ணப்பங்கள் கோரப்படுகின்றது.

1. இந்தப் பதவிக்காக பின்வரும் உத்தியோகத்தர் குழுவிற்கு மாத்திரம் விண்ணப்பிக்க் முடியும்.
   I. **பட்டதாரிகளுக்கு வேலைவாய்ப்பினைப் பெற்றுக் கொடுக்கும் நிகழ்ச்சித்திட்டம் - 2020 இன் கீழ் ஆட்சேர்ப்புச் செய்யப்பட்ட அனைத்து பட்டதாரிப் பயிலுனர்கள்.**
   II. **2018 ம் மற்றும் 2019ம் ஆண்டுகளில் நடைமுறைப்படுத்தப்பட்ட "பயிலுனர் பட்டதாரிகளுக்கு அரச நிறுவனங்களில் பயிற்சியைப் பெற்றுக் கொடுத்தல்**'' எனும் நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் பயிலுநர் பட்டதாரிகளாக பயிற்சிக்காக ஆட்சேர்ப்பு செய்யப்பட்டு 2020.01.01 மற்றும் 2021.01.01 ஆம் திகதியிலிருந்து அபிவிருத்தி உத்தியோகத்தர் சேவையில் நிரந்தர நியமனம் பெற்ற குழுவினர்.
   III. டிப்ளோமாதாரிகள் ஆட்சேர்ப்புச் செய்யப்படுகின்ற பாடங்களுக்காக 2018, 2019, 2020 குழுவினர்களில் டிப்ளோமாதாரிகள்.

02. சிங்களம் , தமிழ் மற்றும் ஆங்கில மொழி மூல பாடங்களுக்காக பாடசாலை மட்டத்தில் பட்டதாரிகளையும் டிப்ளோமாதாரிகளையும் ஆட்சேர்ப்பு செய்வதுடன் குறிப்பிட்ட பாடசாலைகளில் நிலவுகின்ற வெற்றிடங்களுக்காக விண்ணப்பிக்க முடியும். உரிய விண்ணப்பங்களை முன்வைக்கும் போது முன்னுரிமை அடிப்படையில் அதி கூடியது 03 பாடசாலைகளுக்கு மட்டுமேயாகும். விண்ணப்பிக்கக் கூடிய பாடங்களின் எண்ணிக்கை 03 ஆகும். அப் பாடத்திற்குரியவாறு மாகாணத்தில் ஏதாவது 03 பாடசாலைகளுக்கு முன்னுரிமை அடிப்படையில் விண்ணப்பிக்கலாம். ஓவ்வொரு பாடசாலைகளுக்கும் சிங்களம் , தமிழ் மற்றும் ஆங்கில மொழி மூலம் உரிய பாடங்களுக்கான வெற்றிடங்கள் இணைப்பில் காட்டப்பட்டுள்ளது. (வெற்றிடப் பட்டியல் இணைப்பு 01 ல் காட்டப்பட்டுள்ளவாறு).

03 விண்ணப்பித்துள்ள பாடத்திற்கான செய்முறைப் பரீட்சையில் அதிகூடிய புள்ளிகளைப் பெற்றவர்/ புள்ளிகளைப் பெற்றவர்கள் தெரிவு செய்யப்படுவதுடன் விண்ணப்பதாரி விண்ணப்பித்துள்ள ஏனைய பாடசாலைகள் முன்னுரிமை அடிப்படையில் தெரிவு செய்ய நடவடிக்கை எடுக்கப்படும்.(செயன்முறைப் பரீட்சையின் போது பெற்றுக் கொள்ளும் புள்ளிகள் அடிப்படையில் தெரிவு செய்துள்ள பாடசாலைக்கு போதுமான புள்ளிகள் காணப்படாத போது விண்ணப்பப்படிவத்தின் 9.4 இலக்கத்தில் வழங்கப்பட்ட சம்மதத்தின் அடிப்படையில் விண்ணப்பதாரிகளில் இருந்து தகுதியானவர்கள் குறித்த பாடங்களுக்கு வெற்றிடம் நிலவுகின்ற மாகாணத்தின் ஏனைய எந்தப்பாடசாலைக்கும் நியமனம் வழங்கும் அதிகாரம் வட மத்திய மாகாண அரச சேவை ஆணைக்குழுவுக்கு உள்ளது)

04 கீழே குறிப்பிடப்பட்டுள்ள சிங்கள மொழி மற்றும் தமிழ் மொழி மூல பாடங்களுக்காக மேலே 01 ல் தகைமைகள் கொண்ட ஏனைய மாகாணங்களில் வசிப்பவர்களும் விண்ணப்பிக்கலாம். உரிய பாடத்திற்கான வெற்றிடங்களுக்கு ஆட்சேர்ப்புச் செய்யும் போது வட மத்திய மாகாணத்தினுள் நிரந்தர வதிவிடம் கொண்ட தகுதியானவர்கள் இல்லாத சந்தர்ப்பத்தில் மாத்திரம் வேறு மாகாணநிரந்தர வதிவிடம் கொண்ட விண்ணப்பதாரிகள் சம்பந்தமாக கருத்தில்கொள்ளப்படும்.

| **மொழி மூலமும் பாடங்களும்** | |
|---|---|
| சிங்களம் | தமிழ் |
| சா/தரம் கணிதம் | சா/தரம் கணிதம் |
| சா/தரம் - விஞ்ஞானம் | சா/தரம் - விஞ்ஞானம் |
| சா/தரம் இரண்டாம் மொழி தமிழ் | - |
| - | சா/தரம் இரண்டாம் மொழிசிங்களம் |
| சா/தரம் தகவல் தொடர்பாடல் தொழிநுட்பம் | சா/தரம் தகவல் தொடர்பாடல் தொழிநுட்பம் |
| சா/தரம் சித்திரம் | சா/தரம் சித்திரம் |
| உ/தரம் தகவல் தொடர்பாடல் தொழிநுட்பம் | உ/தரம் தகவல் தொடர்பாடல் தொழிநுட்பம் |
| உ/தரம்உயிரியல் தொழிநுட்பவியல் | உ/தரம்உயிரியல் தொழிநுட்பவியல் |
| உ/தரம் தொழிநுட்பவிக்கான விஞ்னாம் | உ/தரம் தொழிநுட்பவிக்கான விஞ்னாம் |
| உ/தரம் பொறியியல் தொழிநுட்பவியல் | உ/தரம் பொறியியல் தொழிநுட்பவியல் |
| உ/தரம் இரசாயனவியல் | உ/தரம் இரசாயனவியல் |
| உ/தரம்பௌத்திகவியல் | உ/தரம்பௌத்திகவியல் |
| உ/தரம் உயிரியல் | உ/தரம் உயிரியல் |
| உ/தரம் இணைந்த கணிதம் | உ/தரம் இணைந்த கணிதம் |

**13 வருட உத்தரவாதக் கட்டாயக் கல்வி**

| |
|---|
| சிறுவர் உளவியல் மற்றும் பாதுகாப்பு Child Psychology and care |
| சுகாதார மற்றும் சமூக நலன்பேனல் Health & Social Care |
| உடற்கல்வி மற்றும் விளையாட்டு Physical Education & Sports |
| கலை நிகழ்ச்சி Performing Arts |
| நிகழ்ச்சி முகாமைத்துவம் Event Management |
| கலையும் கைப்பணியும; Art & Craft |
| உள்ளக வடிவமைப்புInterior Designing |
| புதுப் பாணிவடிவமைப்புFashion Designing |
| கிரபிக் வடிவமைப்புGraphic Designing |
| நிரத்தோற்ற வடிவமைப்புLandscaping |
| பிரயோக தோட்டக்கலை நுட்பக் கற்கைகள் Applied Horticultural Studies |
| கால் நடைஉற்பத்தி தொழிநுட்பம˙ Livestock Product Studies |
| உணவுத் தயாரிப்பு தொழிநுட்பக் கற்கைகள் Food Processing Studies |
| பெருந் தோட்ட உற்பத்தி தொழிநுட்ப கற்கைகள் Plantation Product Studies |
| நிர்மான தொழிநுட்பம் Construction Studies |
| தானியங்கி யந்திர தொழிநுட்ப கற்கைகள் Automobile Studies |
| மின் மற்றும் இலத்திரனியல் தொழில் நுட்ப கற்கைகள் Electrical and Electronic Studies |
| புடைவை மற்றும் ஆடைத்தொழில் கற்கைகள Textile & Apparel Studies |
| உலோகநிர்மாண தொழிநுட்ப கற்கைகள் Metal Fabrication Studies |
| அலுமினிய கட்டமான தொழிநுட்ப கற்கைகள் Aluminium Fabrication Studies |
| கணினி வன்பொருள் மற்றும் வலையமைப்பு Computer Hardware and Networking |
| உற்பத்தி Manufacturing |
| சுற்றுலா மற்றும் விருந்தோம்பல். Tourism and Hospitality |

05 நிலவும் நிதி ஏற்பாடு மற்றும் சேவைத் தேவைப்பாடு என்பவற்றின் அடிப்படையில் ஆட்சேர்ப்பு செய்யும் எண்ணிக்கை தீர்மானிக்கப்படும்.

**06 சம்பள அளவுத்திட்டம் :**

இந்த ஆட்சேர்ப்பு இலங்கை ஆசிரியர் சேவையின் உரிய நியமனமாக மாற்றம் பெறுவது, ஆட்சேர்ப்புச் செய்யப்பட்டு 3 வருடங்களின் பின் நடாத்தப்படும் பரீட்சையில் சித்தி பெறும் நியமனதாரிகளுக்கு மட்டுமே. தற்காலிக ஆசிரியர் நியமனக் காலத்தில் அபிவிருத்தி உத்தியோகத்தர்களுக்கு உரித்தான சமபள வளவுத் திட்டத்திற்கு ஏற்ப மாதாந்த சம்பனம் வழங்கப்படுவதுடன் இலங்கை ஆசிரியர் சேவைக்கு உரிய நியமனம் கிடைத்த பின் இலங்கை ஆசிரியர் சேவைப் பிரமானத்தின்படி சம்பள அளவுத் திட்டத்தில் கொண்டுவரப்படுவர்.
அது வரை அவர்களுக்கு அபிவிருத்தி உத்தியோகத்தர் சேவைப்பிரமானத்திற்கு ஏற்ற சம்பள அளவுத்திட்டத்தின் படியே சம்பளம் வழங்கப்படும்.

**07 கல்வி மற்றும் ஏனைய தகைமைகள்**

**07.1 <u>கல்வித் தகைமைகள்:</u>**

(i) கற்றல் செயற்பாடுகளுக்காக எற்றுக் கொள்ளப்பட்ட விஷேடமாக குறித்துரைக்கப்பட்ட துறைகளுக்குரிய பல்கலைக்கழக மாணியங்கள் ஆணைக்குழவினால் ஏற்றுக் கொள்ளப்பட்ட பல்கலைக்கழகத்தின் மூலம் அல்லது பல்கலைக்கழக மாணியங்கள் ஆணைக்குழுவினால் ஏற்றுக் கொள்ளப்பட்ட பட்டம் வழங்கும் நிறுவனமொன்றின் மூலம் வழங்கப்பட்ட அட்டவணை 02 இல் குறிப்பிடப்பட்டுள்ள பாடங்களுக்குரிய பட்டம் அல்லது டிப்ளோமா இருத்தல்.

மற்றும்

(ii) இலக்கம் 1885/38 மற்றும் 2014.10.23 திகதியுடைய இலங்கை ஆசிரிய சேவைப பிரமானக் குறிப்பில் 6 வது சலத்தின் பிரகாரம் விண்ணப்பிக்கின்ற அனைத்து விண்ணப்பதாரிகளும் கல்வி பொதுத் தராதரப் பத்திர சாதாரண தரப் பரீட்சையில் சிங்கள மொழியில் அல்லது தமிழ் மொழியில் ஒரு பாடமாக சித்தியடைந்திருத்தல்

மிக முக்கியம் - விண்ணப்பப் படிவத்தைப் பூரணப் படுத்தும் போது கவனத்திற் கொள்ள வேண்டும்.

- மேற் குறிப்பிடப்பட்ட பட்டம்/ டிப்ளோமாவிற்கு ஏற்ப விண்ணப்பிக்கக் கூடிய பாடங்கள் தொடர்பாக விண்ணப்பதாரிகள் அவதானமாக இருக்க வேண்டும்.
- பட்டத்தில்/டிப்ளோமாவில் பயின்ற பிரதான பாடம்/ பாடங்களுக்கு ஏற்ப மாத்திரம் உரிய ஆசிரியர் வெற்றிடங்களுக்கு விண்ணப்பித்தல் வேண்டும்.
- விண்ணப்பித்த பாடம் / பாடங்கள் மற்றும் பாடசாலைகள் என்பன எக் காரணம் கொண்டும் பின்னர் மாற்றம் செய்ய இடமளிக்கப் பட மாட்டாது.

**07.2 உடல் மற்றும் உளத்தகுதி**

அனைத்து விண்ணப்பதாரிகளும் ஆசிரியராகக் கடமையாற்றுவதற்கு பொருத்தமான உள மற்றும் உடற் தகுதியைக் கொண்டிருக்க வேண்டும்.

**07.3 வயது:**

2019.12.31 ஆம் திகதிக்கு 18 வயதிற்கு குறையாதவராகவும் 35 வயதிற்கு மேற்படாதவராகவும் இருத்தல் வேண்டும்.

**குறிப்பு :-** பட்டதாரிகளுக்கு வேலைவாய்ப்பினைப் பெற்றுக் கொடுக்கும் நிகழ்ச்சித்திட்டம் - 2020 இன் கீழ் ஆட்சேர்ப்புச் செய்யப்பட்ட பயிலுனர்கள், 2020.01.01 ம் , 2021.01.01 ம் திகதியிலிருந்து மற்றும் 2019.12.31 ம் திகதிக்கு 35 வயதுக்கு குறைந்ததாகக் கருதப்படும்.

**07.4 வேறு தகைமைகள்**

I. விண்ணப்பதாரி இலங்கை பிரசையாக இருத்தல் வேண்டும்.
II. சிறந்த நல்லொழுக்கம் உடல் ஆரோக்கியம் இருத்தல் வேண்டும்.
III. வடமத்திய மாகாணத்தின் எந்தவொரு பிரதேசத்திலும் சேவையாற்றக் கூடியவராக இருத்தல் வேண்டும்.

IV. (அ) வெற்றிடங்களுக்காக விண்ணப்பிக்கும் விண்ணப்பதாரிகள் வட மத்திய மாகாணசபையின் அதிகாரத்திற்குற்பட்ட பிரதேசத்தில் நிரந்தர வதிவிடத்தைக் கொண்டிருத்தல் வேண்டும். (கிராம உத்தியோகத்திரினால் வழங்கப்பட்ட வதிவிடச் சான்றிதழ் நேர்முகப் பரீட்சையின் போது சமர்பிக்கப்பட வேண்டும்)

(ஆ) 04 ஆவது பகுதியில் குறிப்பிடப்பட்டுள்ள சிங்களம் மற்றம் தமிழ் மொழி மூல விஷேட பாடங்களுக்காக விண்ணப்பித்த ஏனைய மாகாணங்களில் வசிக்கும் விண்ணப்பதாரிகள் தாங்கள் வாழும் பிரதேசத்தின் கிராம உத்தியோகத்தரினால் வழங்கப்படும் வதிவிடச் சான்றிதழை நேர்முகப் பரீட்சையின் போது சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

**08. <u>சேவை நிபந்தனைகள்.</u>**

(i) இங்கு வழங்கப்படும் நியமனம் தற்காலிகமாக அமைவதுடன், தற்காலிக நியமனம் வழங்கப்பட்டு 3 வருடங்களுக்குள் ஆசிரியர் சேவைப் பிரமாணக் குறிப்பின் 7.2.4.1 இற்கு ஏற்ப எழுத்துப் பரீட்சை ஒன்று நடத்தப் பட்டு அதில் சித்தியடையும் உத்தியோகத்தர்களுக்கு நிரந்தர ஆசிரியர் நியமனம் வழங்கப்படும்.

(ii) மேற்குறித்த பரீட்சையில் சித்தியடைத் தவறும் விண்ணப்பதாரிகளுக்கான ஒரு வருட காலத்தினுள் மீண்டும் பரீட்சை ஒன்று நடத்தப்பட்டு அதில் சித்தி பெறுபவர்களுக்கு ஆசிரியர் நியமனம் வழங்கப்படும். அதிலும் சித்தி பெறத் தவறியவர்கள் முன்பிருந்த பதவிக்கு நியமிக்கப்படுதல் அல்லது பட்டதாரிப் பயிலுனர் அபிவிருத்தி உத்தியோகத்தர்களாக இணைப்புச் செய்யப்படுவர். அல்லது பரீட்சையில் சித்தி பெறாத டிப்ரோமாதாரிகளின் சேவை முடிவுக்குக் கொண்டுவரப்படும்.

(iii) அரச/ மாகாண சபைகள் மற்றும் அரச சேவைகளின் நியமங்களைக் கட்டுப்படுத்தும் பொது நிபந்தனைகளுக்கும் வட மத்திய மாகாண சபைக்குரிய அரச சேவை, இலங்கை ஆசிரியர் சேவை பிரமாணக் குறிப்பில் விதிக்கப்பட்டுள்ள நிபந்தனைகளுக்கும் அப்பிரமாணக் குறிப்பில் செய்யப்பட்டுள்ள மாற்றங்கள் அல்லது எதிர்காலத்தில் மேற்கொள்ளப்படவுள்ள மாற்றங்களுக்கும் கட்டுப்பட்டு

தேர்தேடுக்கப்படும் பட்டதாரி மற்றும் டிப்ளோமாதாரி விண்ணப்பதாரிகளின் 3 வருடத்தினுள் நடைபெறும் எழுத்து மூலப் பரீட்சையில் சித்தி பெறுபவர்கள் நியமனம் பெற்ற தினத்திலிருந்து இலங்கை ஆசிரியர் சேவையின் வகுப்பு 3-1 (அ) தரத்தில் நியமிக்கப்படுவர

(iv) இவ்வாறு இந்தப் பதவிக்கு ஆட்சேர்ப்புச் செய்த பின்பும் கூட உரிய ஆசிரியர் சேவைக்கு ஆட்சேர்ப்புச் செய்யும் வரை அபிவிருத்தி உத்தியோகத்தர் சேவைப்பிரமான நடைமுறைகள் மற்றும் அந்த சேவைப்பிரமானத்தின் கீழாக தங்களுக்கு வழங்கப்பட்டுள்ள நியமனக் கடிதத்தின் நிபந்தனைகளுக்கு உட்பட்டதாகும்.

(v) நியமனம் கிடைக்கும் பாடசாலையில் 05 வருடங்களும் மற்றும் அப்பாடசாலை அமைந்துள்ள கல்விக் கோட்டத்திற்குரிய பாடசாலைகளில் மேலும் 02 வருடங்களும் சேவையாற்ற வேண்டும். நியமனம் பெற்ற பாடசாலை அல்லது கோட்டத்திற்குள் 07 வருட சேவைக்காலத்தின் பின்பு மாத்திரம் நியமனம் பெற்றவருக்கு இடமாற்றத்திற்காக விண்ணப்பிக்க முடியும்.

**09ஆட்சேர்ப்புச் செய்தல்:**

**09.1 ஆட்சேர்ப்புச் செய்தல் முறை:**

(அ) வட மத்திய மாகாணத்தில் வதிவிடத்தைக் கொண்டுள்ளவர்கள் அந்தந்தப் பாடசாலைகளில் நிலவும் வெற்றிடங்களுக்காக பாடசாலை மட்டத்தில் ஆட்சேர்ப்புச் செய்யப்படுவர். (அட்டவனை 01 அமைவாக ) உரிய பாடசாலையில் உரிய பாடங்களுக்கு விண்ணப்பித்துள்ள அணைத்து விண்ணப்பதாரிகளும் இலக்கம் 1885/38 மற்றும் 2014-10-23 திகதியுடைய இலங்கை ஆசிரியர் சேவைப்பிரமானங்களின் நடைமுறைக்கேற்ப தகைமைகளைப் பரீட்சிக்கும் நேர்முகப்பரீட்சையும் செயன்முறைப் பரீட்சையும் நடாத்தப்பட்டு பெற்ற புள்ளிகளில் திறமை முன்னுரிமை அடிப்படையில் ஆட்சேர்ப்பு செய்யப்படுவர். அந்த வகையில் விண்ணப்பதாரிகளின் அடிப்படைக் கல்வி தகைமைகள் மற்றும் விண்ணப்பதாரி ஆசிரியராக கடமையாற்றுவதற்கு போதுமான அளவு உடல்,உள தகுதியை கொண்டுள்ளாரா எனவும் பரீட்சிக்கப்படும்.

**09.2 நேர்முகப்பரீட்சை:**

இவ் வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிட்டுள்ள தகைமைகளைப் பெற்றுள்ளாரா எனப் பரீட்சித்தல் உடல், உள தகுதி பெற்றுள்ளாரா என்பவை நேர்முகப் பரீட்சையின் போது பரீட்சிக்கப்படும். இங்கு புள்ளிகள் வழங்கப்பட மாட்டாது. நேர்முகப் பரீட்சையில் தகைமையுடையவர்கள் செய்முறைப் பரீட்சைக்கு அமர்த்தப்படுவர்.

**09.3 செயன்முறைப் பரீட்சைக்கு புள்ளி வழங்குதல் (அதிகூடிய புள்ளி 25)**

செயன் முறைப் பரீட்சையின் போது விண்ணப்பதாரி விண்ணப்பித்த பாடத்துக்குரிய தலைப்பொன்றின் கீழ் 5 நிமிடங்களுக்குக் குறையாத முன்வைப்பொன்றைச் செய்தல்

வேண்டும். இங்கு விண்ணப்பதாரியின் முன்வைக்கும் ஆற்றல் தொடர்பாடல் திறன் தொடர்பாக விஷேடமாக கவனத்திற் கொள்ளப்படும்.

| தொடர் இல | செயன்முறைப் பரீட்சையின் போது புள்ளி வழங்கப்படும் தலைப்புகள் | உச்ச புள்ளிகள் (25) |
|---|---|---|
| 1 | நோக்கமும் பாடப் பிரவேசமும். | 05 |
| 2 | ஆளுமையும் தொனிக் கட்டுப்பாடும் | 05 |
| 3 | தொடர்பாடலின் தெளிவு | 05 |
| 4 | நேர முகாமைத்துவம் | 05 |
| 5 | முன்வைக்கும் நுட்பமுறைப் பாவனை | 05 |
| | மொத்தப் புள்ளிகள். | 25 |

## 10. தேர்ந்தெடுக்கப்படும் முறை.

(அ) இவ் வர்த்தமாணி அறிவித்தலின் ஏற்பாடுகளுக்கேற்ப ஆட்சேர்ப்பு நடைபெறும்.

(ஆ) ஏதாவது ஒரு விண்ணப்பதாரி 02 அல்லது 03 பாடங்டகளுக்கு தேர்தெடுக்கப்படும் சந்தர்ப்பத்தில் நிலவும் வெற்றிடங்கள், விண்ணப்பதாரிகளின் எண்ணிக்கை என்பனவற்றை கருத்திற் கொண்டு அவர்களுக்கு நியமனம் வழங்கும் பாடம் தொடர்பாக வட மத்திய மாகாண மாகாண அரச சேவை ஆணைக்குழு தீர்மாணிக்கும்.

## 11. விண்ணப்பிக்க வேண்டிய முறை:

**11.1** விண்ணப்பம் இவ்வறிவித்தலில் இணைக்கப்பட்டுள்ள மாதிரிப் படிவத்திற்கமைய விண்ணபதாரரால் கடதாசியின் இரண்டு பக்கங்களையும் பயன்படுத்தி A4 அளவு கடதாசியில் தயாரித்து தனது கையெழுத்தினாலேயே பூரணப்படுத்த வேண்டும். 1 - 4 வரையான விடயங்கள் முதல் பக்கத்திலும் 5 - 7 வரை இரண்டாம் பக்கத்திலும் எஞ்சியவை மூன்றாம் பக்கத்திலுமாக விண்ணப்பம் தயாரிக்கப்பட வேண்டும் என்பது விசேடமாக கவனத்தில் கொள்ள வேண்டும்.

**11.2** உரிய தகைமைகள் எல்லா விதத்திலும் பூரணப்படுத்தாத விண்ணப்பதாரிகளின் விண்ணப்பங்கள் மற்றும் உரிய முறைப்படி தயாரிக்கப்படாத பூரணமற்ற மற்றும் உரிய தினத்தின் பின் கிடைக்கும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும். அவ்வாறரன விண்ணப்பங்களுக்கு நேர்முகப் பரீட்சைக்கோ அல்லது செயன்முறைப் பரீட்சைக்கு தோற்றுவதற்கான சந்தர்ப்பமும் வழங்கப்பட மாட்டாது. இது சம்பந்தமாக முன் அறிவித்தலும் வழங்கப்பட மாட்டாது. ( முன்வைக்கப்படும் விண்ணபத்தின் பிரதியை விண்ணபதாரி தன் வசம் வைத்துக் கொள்வது பயனுள்ளதாக அமையும்.)

**11.3** கேள்விக் குறைபாடு , பார்வைக் குறைபாடு மற்றும் வேறு விசேட தேவைப்படும் விண்ணப்பதாரிகள் முன்வைக்கும் விண்ணப்பங்களில் இடது பக்க மேல் மூலையில் சிவப்பு நிறத்தால் தனது குறைபாட்டினை தெளிவாகக் குறிப்பிடல் வேண்டும்.

**11.4** ஒரு விண்ணப்தாரி ஒரு பாடத்திற்கு மேலதிகமாக விண்ணப்பிப்பதாயின் விண்ணப்பத்தில் உரிய பாட இலக்கத்துடன் தெளிவாக அந்தப் பாடங்களைக் குறிப்பிட்டு ஒரு விண்ணப்பத்தை மாத்திரம் முன்வைக்க வேண்டும்.

**11.5** விண்ணப்பத்தில் விண்ணப்பத்தாரியின் கையொப்பம் அபேட்சகர் தற்போது கடமை புரியும் நிறுவனத்தின் தலைவர் அல்லது அதிகாரமளிக்கப்பட்ட உத்தியோகத்தர் மூலம் உறுதிப்படுத்தல் வேண்டும்.

**11.6** மத்திய அரச சேவையில் அல்லது மாகாண அரச சேவையில் சேவையிலீடுபடும் ஒரு உத்தியோகத்தர் தன்னுடைய விண்ணப்பத்தை கட்டாயமாக தனது நிறுவனத் தலைவர் ஊடாக முன்வைப்பதுடன் இந்த நியமனத்திற்குத் தகுதியானவராக தெரிவு செய்யப்பட்டால் அந்த நிறுவனத்திலிருந்து விடுவிப்பதற்குள்ள சம்மதத்தை உறுதிப்படுத்த வேண்டும்.

**11.7** சரியாகப் பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பம் 2022.09.09 ஆம் திகதி அல்லது அதற்கு முன் கிடைக்கப் பெறக் கூடியதாக **"செயலாளர்இ மாகாண சபை அரச சேவை ஆணைக்குழு வட மத்திய மாகாணம்இமாவட்ட செயலாளர் வளாகம் அனுராதபுரம்"** எனும் முகவரிக்கு பதிவு தபாலில் அனுப்ப வேண்டும். விண்ணப்பத்தை அனுப்புகின்ற கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் ( பட்டதாரிகள் ∴ டிப்ளோமாதாரிகள் இலங்கை ஆசிரியர் சேவையில் ஆட்சேர்ப்புச் செய்தல் - 2022) எனவும் விண்ணப்பிக்கும் மாவட்டத்தையும் பாடத்தையும் கட்டாயமாகக் குறிப்பிட வேண்டும்.

**11.8** தபால் மூலம் முன்வைக்கும் போது விண்ணப்பம் காணாமல் போதல் அல்லது தாமதமாகுதல் சம்பந்தமதன எந்த மனுவும் கவனத்தில் கொள்ளப்படமாட்டாது.

## 12. விண்ணப்பதாரியின் அடையாளம்

விண்ணப்பதாரிகள் தாங்கள் முகங் கொடுக்கும் நேர்முகப்பரீட்சை, செயன்முறைப் பரீட்சைகளின் போது பின்வரும் ஆவணங்கள் மூலம் அடையாளத்தை உறுதிப்படுத்த வேண்டும்.

(அ) ஆட்பதிவுத் திணைக்களத்தினால் வழங்கப்பட்ட தேசிய அடையாள அட்**டை**

**அல்லது**

(ஆ) செல்லுபடியாகும் கடவுச்சீட்டு/சாரதி அனுமதிப்பத்திரம்.

13. விண்ணப்பத்தைப் பூரணப்படுத்தும் போது அவதானத்துடன் சரியான தகவல்களை வழங்க வேண்டும். அத் தகவல்களை எக் காரணங் கொண்டும் திருத்தம் செய்வதற்கு இடமளிக்கப்பட மாட்டாது. இவ் ஆட்சேர்ப்பு முறையின் சட்ட விதிகளுக்கு ஏற்ப ஏதாவது ஒரு விண்ணப்பதாரி நேர்முகப் பரீட்சைக்கும் செயன்முறைப் பரீட்சைக்கும் தோற்றுவதற்கு தகுதியற்றவர் எனத் தெரியவருமாயின் அவை நடைபெறுவதற்கு முன்பு அல்லது நடைபெறும் போதோ அல்லது நடைபெற்ற பின்போ எந்தவொரு சந்தர்ப்பத்திலும் அவரின் விண்ணப்பத் தகுதி இரத்துச் செய்யப்படலாம். விண்ணப்பதாரி பிழையான தகவல்கள் வழங்கியுள்ளார் எனவோ வேண்டுமென்றோ தகவல்கள் மறைக்கப்பட்டுள்ளன எனவோ தெரியவரின் எந்தவொரு சந்தர்ப்பத்திலும் சேவையிலிருந்து நீக்கப்படவோ அல்லது சேவையை முடிவுக்கு கொண்டு வருவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

14. இவ் அறிவித்தலில் குறிப்பிடபபட்டுள்ள தகைமைகளைக் கொண்டுள்ளவர்கள் மாத்திரம் விண்ணப்பித்துள்ளார்கள் என்ற முன் தீர்மானத்தின் அடிப்படையில் விண்ணப்பங்களை ஏற்றுக் கொள்ளும் தினத்தில் அல்லது அத் தினத்திற்கு முன்பு உரியவாறு பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பங்களை முன்வைத்துள்ள விண்ணப்பதாரிகளுக்கு வட மத்திய மாகாண அரச சேவை ஆணைக்குழுவின் செயலாளரினால் நேர்முகப் பரீட்சைக்கும் செயன்முறைப் பரீட்சைக்கும் அழைப்புக் கடிதம் அனுப்பப்படும். விண்ணப்பதாரிகளுக்கு அழைப்புக் கடிதம் அனுப்பப்பட்டவுடன் அதனைக் குறிப்பிட்டு வடமத்திய மாகாண அரச சேவை ஆணைக்குழுவின் வலைத்தளத்தில் (psc.nc.gov.lk) அறிவித்தல் ஒன்று இடப்படும். நேர்முகப் பரீட்சை அல்லது செயன் முறைப் பரீட்சை நடை பெறுவதற்கு 03 தினங்களுக்கு முன் அழைப்புக் கடிதம் கிடைக்கவில்லையாயின் அதைப்பற்றி உடனடியாக,**"செயலாளர், மாகாண அரச சேவை ஆணைக்குழு, வடமத்திய மாகாணம், அனுராதபுரம்"** எனும் முகவரிக்கு அறிவிக்க வேண்டும். அவ்வாறு அறிவிக்கும் போது கீழ்வரும் தகவல்கள் முன்வைக்கப்பட வேண்டும்.

i. விண்ணப்பதாரியின் முழுப் பெயர்

ii. முகவரி

iii. தேசிய அடையாள அட்டை இலக்கம்.

iv. தொலைபேசி இலக்கம்.

விண்ணப்பம் கோரப்பட்டுள்ள அறிவித்தலுடன் தொடர்பான விடயங்கள் இந்த அறிவித்தலில் உள்ளடக்கப்படாத விடயங்கள் அல்லது இந்த அறிவித்தலின் ஏற்பாடுகளில் உள்ளடக்கப்படாத வேறு விடயங்கள் காணப்படுமாயின் அது தொடர்பாக வட மத்திய மாகாண அரச சேவை ஆணைக்குழுவின் தீர்மானம் இறுதித் தீர்மானமாகும்.

15. இந் நேர்முகப் பரீட்சை மற்றும் செய்முறைப் பரீட்சையை நடத்துதல் பிற்போடுதல் இரத்துச் செய்தல் அல்லது நடைபெற்ற பின் தேர்தெடுத்தல் / தேர்ந்தெடுக்காதிருத்தல் அல்லது பூரணப்படுத்துகின்ற வெற்றிடங்களின் எண்ணிக்கை தொடர்பான இறுதித் தீர்மானம் வடமத்திய மாகாண அரச சேவை ஆணைக் குழுவிற்குரியது.

16. சிங்கள, தமிழ் மொழிகளில் வெளியிடப்படும் அறிவித்தலில் மொழிப் பிரயோகங்களுக்கிடையில் ஏதாவது வேறுபாடுகள் பொருத்தமின்மை காணப்படுமாயின் அவ்வாறான சந்தர்ப்பங்களில் சிங்கள மொழி மூல அறிவித்தல் சரியானது எனக் கருதி நடவடிக்கைகள் மேற் கொள்ளப்படும்.

வடமத்திய மாகாண அரச சேவை ஆணைக்குழுவின் ஆணையின் படி

செயலாளர்,
வடமத்திய மாகாண அரச சேவை ஆணைக்குழு,
அனுராதபுரம்.

2022.08.17